ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2481/23 - 2026 මාර්තු මස 27 වැනි සිකුරාදා - 2026.03.27

2481/23 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KDS/KUN/04/07/16/04/112.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் இல.: 4-3/18/2021/WS/357.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் திருத்தச் சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 701, இஹலவெல கிராம அலுவலர் பிரிவில் கென்கல்ல கிராமத்திலமைந்த நில அளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் க.வ.320854 மற்றும் 2025.12.12 ஆந் திகதிக்கு உரிய கடத்திரல் வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 01 இனால் குறிப்பிடப்பட்டுள்ள "கொலொன்கஹவத்த" எனும் பெயரிலும் 0.0139 ஹெக்டயார் விஸ்தீரண முடைய கீழ் காணப்படும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

01. **துண்டு இல. 01 - காணியின் பெயர்: கொலொன்கஹவத்த; உரிமை கோருபவர்: டி. ஜி. எம். யூ. டி. எஸ். தொலஹமுன, இலக்கம் 01, ஏக்கர் 2இன் பகுதி, கொலொன்கஹவத்த, கென்கல்ல; விஸ்தீரணம்: 0.0139 ஹெக்டயார்.**

வடக்கு: ஆ.வ.க 2681 இல் காணித்துண்டு இலக்கம் 2 மற்றும் பாதை; கிழக்கு: ஆ.வ.க 2681 இல் காணித்துண்டு இலக்கம் 2; தெற்கு: ஆ.வ.க 2681 இல் காணித்துண்டு இலக்கம் 2 மற்றும் பாதை; மேற்கு: ஆ.வ.க 2681 இல் காணித்துண்டு இலக்கம் 2.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு ஆனி மாதம் 16 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு குண்டசாலை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்

மேலும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு ஆனி மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. எஸ். டி. திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
குண்டசாலை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
குண்டசாலை,
2026, பங்குனி 16.

EOG 03 - 0213

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: RUW/LAN/ACQTN/A2/131.
காணி அமைச்சின் கோவை இல.: 4-3/2/2015/PT/223.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் திருத்தச் சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

பொது விடயம் என்னவெனில் கலபிட்டமட தபால் அலுவலகத்திற்காக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக காணி எடுத்துக் கொள்ளல்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில் ருவன்வல்லை பிரதேச செயலாளர் பிரிவில் எகொட பொத்த பத்துவ, இலக்கம் 99B, கலபிட்டமட கிராம அலுவலர் பிரிவில் கலப்பிட்டமட கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் கடத்திரல் வரைபடத்தில் 610418 ஆம் இலக்க, வலய இலக்கம் 03, பத்திர இலக்கம் 01 மற்றும் 2026.01.08 ஆந் திகதிய வரைபடத்தில் விபரமாகக் காட்டப்பட்டுள்ள 0.0895 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள காணித்துண்டு இலக்கம் 01 தொடக்கம் 04 வரையிலான காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:-

**01. காணித் துண்டு இல. 1**
காணியின் பெயர்: ருப்பெகாவ வத்த; உரிமை கோருபவர்: காணி மறுசீரமைப்பு சபை; விஸ்தீரணம்: 0.0682 ஹெக்டயார்.

**02. காணித் துண்டு இல. 2**
காணியின் பெயர்: ருப்பெகாவ வத்த; உரிமை கோருபவர்: இலங்கை டெலிகொம் நிறுவனம்; விஸ்தீரணம்: 0.0198 ஹெக்டயார்.

**03. காணித் துண்டு இல. 3**
காணியின் பெயர்: ருப்பெகாவ வத்த; உரிமை கோருபவர்: இலங்கை டெலிகொம் நிறுவனம்; விஸ்தீரணம்: 0.0011 ஹெக்டயார்.

**04. காணித் துண்டு இல. 4**
காணியின் பெயர்: ருப்பெகாவ வத்த; உரிமை கோருபவர்: தேடிக்கொள்ள முடியவில்லை; விஸ்தீரணம்: 0.0004 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு ருவன்வல்லை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். டி. எஸ். என். ஹெட்டிகே.
பிரதேச செயலாளர்,
ருவன்வல்லை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
ருவன்வல்லை.
2026, மாச்சு 17

EOG 03 - 0214

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.